என் பெயர் விஜயகுமார் . சூலூரிலிருந்து வருகிறேன். அவருக்கு லைசென்ஸ் கொடுத்தீர்களானால் பல குடும்பம் பிழைக்கும் அதற்காக லைசென்ஸ் கொடுக்க வேண்டும். நன்றி.

7. திரு.முகிலன்

கோவை மாவட்ட நிர்வாகமும் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் கோவை தெற்கும் இணைந்து நடத்துகின்ற பச்சாபாளையம் கிராமம் செந்தில்குமார் அவர்களுடைய புல எண் 285 /3P பகுதி 286 /2P பகுதி ஆகியவற்றில் 1.95 ஹெக்டர் அதாவது சுமார் 5 ஏக்கர் பரப்பளவிலான கல்குவாரி கருத்து கேட்பு கூட்டத்தினுடைய தலைவர் எங்களுடைய பேரன்பிற்குரிய மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கும், முன்னிலை வகுத்து நடத்திக் கொண்டிருக்கும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும், இங்கே கலந்து கொண்டுள்ள பல்வேறு துறை சார்ந்த அதிகாரிகளுக்கும் காவல்துறையினருக்கும் பத்திரிகையாளர்களுக்கும் மற்றும் பல்வேறு சமூக அக்கறை உள்ளவர்களுக்கும் விவசாய அமைப்பினருக்கு பொது மக்களுக்கும் கல் குவாரி உரிமையாளர்களுக்கும், கல் குவாரி உரிமையாளர்களால் அழைத்து வரப்பட்டவர்களுக்கும் அனைவருக்கும் எங்களுடைய வணக்கங்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். ஒரு கல் குவாரிக்கான கருத்துக் கேட்புக் கூட்டம் என்பது கடந்த காலங்களில் எல்லாம் கிடையாது. 2018ல் தேசிய பசுமை தீர்ப்பாயம் உத்தரவிட்ட பின்பு 5 ஹெக்டர் அதாவது 12 .5 ஏக்கர் ஒரு கல் குவாரி அமைகின்ற புலத்திலிருந்து 500 மீட்டர் சுற்றளவில் இருந்தால் கருத்து கேட்பு கூட்டம் நடத்த வேண்டும் என்ற தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் உத்தரவு அடிப்படையில் இந்த குவாரி 5 ஏக்கர் ஆக இருந்தாலும் கூட சுற்றியுள்ள பரப்பளவில் சுமார் 20 ஏக்கருக்கு மேல் இருப்பதால் இந்த கருத்து கேட்பு கூட்டம் நடை பெறுகிறது. இந்த கருத்து கேட்பு கூட்டத்தில் இந்த குவாரி இயங்குவதால் ஏற்படும் காற்று மாசு, நீர் மாசு, மண் மாசு, ஒலி மாசு, பல்லுயிர் சூழல் மாசு சமூக பொருளாதார சூழ்நிலை பாதிப்புகளையும் அதை இந்த குவாரி இயக்கத்தின் மூலம் எவ்வாறு தடுத்து நிறுத்த போகிறோம் என்றெல்லாம் கூறி இருக்கிறார்கள். அவர்கள் சொன்ன படி இதில் நடத்துகிறார்களா? நடத்த முடியுமா? என்பதை பேசுவதற்காக வந்திருக்கிறேன். எனக்கு முன்னாள் கல் குவாரியை ஆதரித்தும் எதிர்த்தும் பலரும் பேசினார்கள். ஆனால் பேசியவர்கள் யாரும் இந்த குவாரியால் காற்று மாசுபாடோ, அல்லது நீர் மாசுபாடோ அல்லது ஒலி மாசுபாடோ, அல்லது பல்லுயிர் சூழல் மாசுபாடோ ஏற்படவில்லை என்பதை யாரும் சொல்லவில்லை. அதே போல் குவாரி சட்டப்படியான வகையில் காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை தான் இயங்குகிறது. ஏற்கனவே திட்ட வடிவமைப்பாளர் சொன்னது போல வெடி வைப்பது என்பது மதியம் 1 முதல் 2 வரை தான் வெடி வைக்கின்றார்கள், வெடிக்கின்ற வெடிகளும் நம்முடைய தீபாவளி துப்பாக்கியில் போட்டு வெடிக்கின்ற மாதிரி டுப் டுப் டுப்

என்ற முறையில் வெடிக்காமல் டுமீல் என்ற முறையில்தான் வெடிப்பதை தெரிவித்தார்கள். அதே போல போர் குழி போட்டு வெடிப்பதையும் தெரிவித்தார்கள். இப்படியான நிலையில்தான் இந்த குவாரி சட்டப்படி அனுமதிக்க முடியுமா என்பதை பற்றி பேச வந்திருக்கின்றேன்.

இந்த குவாரிக்கான முதல் அடிப்படை என்பது எனக்கு முன்னாலே ஒரு பேராசிரியர் பேசினார் எங்களிடம் தூர அளவீட்டிற்காக வருவார்கள் தூர அளவீடு நாங்கள் அளந்து கொடுப்போம் என்று, இந்த குவாரி உரிமையாளரும் தூர அளவீடு தொடர்பாக தன்னுடைய அபிடவிட் என்று சொல்லக்கூடிய சத்திய பிரமான வாக்கு மூலத்தை SEIAA விற்கும் அதே போல மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கும் கொடுத்துள்ளார். அதில் 300 மீட்டர் சுற்றளவில் அங்கீகரிக்கப்பட்ட வீடுகளோ, வீட்டு மனைகளோ, ஊர் நத்தமோ கோவில்களோ எதுவும் இல்லை என தெரிவித்து உள்ளார். சட்டப்படி அப்படி இருக்கிறதா என்று நாங்கள் சென்று பார்த்தோம். சிறு கனிம சலுகை விதிகளின் படி ஒரு குவாரி புலத்தினுடைய 300 மீட்டர் சுற்றளவில் அங்கீகரிக்கப்பட்ட வீடுகள், வீட்டு மனைகள், ஊர் நத்தம் இருக்கக் கூடாது, அங்கீகரிக்கப்பட்ட வீடுகள் என்பது கிராமத்திலே பஞ்சாயத்திற்கு வரி கட்டுகிற வீடெல்லாம் அங்கீகரிக்கப்பட்ட வீடு அல்ல, கிராமத்தில் revenue ரெகார்ட் என்று சொல்லக் கூடிய வில்லேஜ் மேப் அது 1979 லிருந்து 85 வரை போடப்பட்ட UDR காலத்தில் மேப் அதில் இருக்க வேண்டும் இல்லையென்றால் FMB ல் புல வரைபடத்தில் இருக்க வேண்டும். இல்லையென்றால், அ பதிவேடு என்று சொல்லக் கூடிய A ரெஜிஸ்டரில் இருக்கவேண்டும். இப்படி இருக்க வேண்டும் இல்லை என்றால் பஞ்சாயத்தில் அந்த வீடு ஓட்டு வீடாக இருக்கலாம், ஓலை சாலையாக இருக்கலாம், தார்சு வீடாக இருக்கலாம். பஞ்சாயத்தில் கொடுத்து அப்ரூவல் பெற்றிருக்கவேண்டும். இல்லை என்றால் DTCP அப்ரூவல் வாங்கி இருக்க வேண்டும். இந்த குவாரியில் அப்படி அப்ரூவல் பெற்ற வீடுகள் இல்லை என்று குவாரி உரிமையாளரும் சொல்லி இருக்கிறார், கிராம நிர்வாக அலுவலரும் சொல்லி இருக்கிறார். நாங்கள் சென்று இந்த புலத்தை அரசினுடைய ஆவணங்களான FMB யை வைத்து ஆய்வு செய்தோம். FMB வைத்து ஆய்வு செய்யும் போது இந்த குவாரியினுடைய 285 புலத்தினுடைய மேற்கு புற பகுதியில் 3 வீடுகள் 150 மீட்டரில் இருக்கிறது. இது FMB இல் இருக்கிறது. கம்ப்யூட்டர் FMB இல் மூன்று வீடுகள் இருக்கிறதாக காட்டி இருக்கிறார்கள். அதே போல இந்த குவாரி புலத்தினுடைய மேற்கு புற பகுதி புல எண் 230/6B–ல் 200 மீட்டரில் ஒரு வீடு இருக்கிறது.. அடுத்தபடியாக புல எண் 279 , இது குவாரி புலத்தினுடைய வடக்கு புற பகுதி அதில் புல எண் 280 வது மீட்டர் தூரத்தில்

அங்கீகரிக்கப்பட்ட கட்டிடம் இருக்கிறது. அதே போல புல எண் : 287 இதுவும் வடக்குபக்கத்திலே இருக்கிறது புல எண் 295 வது மீட்டரில் வீடு இருக்கிறது . அதேபோல தென்மேற்கு பகுதி புல எண் 282 கிழக்கு பகுதி அதில் 90 மீட்டரில் இரண்டு வீடுகள் இருக்கிறது.. அதறகு அடுத்த படியாக புலஎண் 234ல் கோவில் இருக்கிறது.. அதற்கு அடுத்த படியாக குவாரி புலத்தினுடைய நேர் தெற்கு புறத்தில் 238/1 ல் 200 வது மீட்டர் தூரத்தில் வீடு இருக்கிறது.அதேபோல புலஎண் 237/1சி ல் பழனி ஆண்டவர் கோவில் 220 மீட்டர் தூரத்தில் இருக்கிறது. அதேபோல 237 E ல் ஒரு வீடு இருக்கிறது. இது தென்மேற்கு பகுதியில் 290 வது மீட்டரில் இருக்கிறது.அதுமட்டுமில்லாமல் புல எண் 242 ல் 290 வது மீட்டரில் கருப்பராயன் கோவில் இருக்கிறது. அது கூகுள் படத்தில் காட்டி இருக்கிறார்கள். இத்தனை வீடுகள் அதாவது புல எண் 233, 230, 279, 287, 282, 234, 238, 237, 242 என இத்தனை புலங்களில் வீடுகள், கோவில்கள் இருக்கிறது. இப்போது நிறைய பேர் சொல்லலாம் ப்ரொபஸர்சார்கூட சொல்லலாம் நாங்கள் போய் கூகுள் மேப்பில் பார்த்தோம், அங்கு வீடே இல்லையென்று, இதற்கு தகவல் உரிமை சட்டத்தில் நில நிர்வாக ஆணையர் தெளிவாக கொடுத்து இருக்கிறார்கள், என்ன கொடுத்திருக்கிறார் என்றால் UDR மற்றும் நத்தநில அளவை புல பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள வீடு சிதில மடைந்திருந்தாலோ, அல்லது இடிந்திருந்தாலோ அது அந்த வரைபடங்களில் ஆரம்ப நிலையில் எவ்வாறு குறிக்கப்பட்டிருந்ததோ அவ்வாறே பதியப்பட வேண்டும் என்றும் கல்குவாரி தொடர்பான தூர அளவீடு வரைபட அறிக்கையில் அங்கீகரிக்கப்பட்ட வீடு, வீட்டுமனை, ஓடை, பாதை ஆகியவற்றை கிராம வரைபடம், புலவரைபடம் மற்றும் அ பதிவேடு BDO RECORD, DTCP RECORD ஆகியவற்றை சரிபார்த்தே வழங்க வேண்டும் என்று குறிப்பிட்டு இருக்கிறார். இது எல்லா சர்வேயர் VAO எல்லோருக்கும் கொடுத்து இருக்கிறார்கள். பல பொறியியல் கல்லூரிகள் நாங்கள் பார்த்திருக்கிறோம் அவர்கள் கூகுள்லே பார்த்து அதெல்லாம் இல்லை என்று சொல்லி கொடுத்து இருக்கிறார்கள் நாங்கள் பார்த்து இருக்கிறோம் பேராசிரியர் வந்து இருக்கிறார் அதனால் சொல்லுகிறேன் எனவே அது அப்படி கொடுக்கமுடியாது சட்டப்படி இப்படித்தான் கொடுக்கப்பட வேண்டும் இதெல்லாம் கடந்த காலங்களில் பேசப்படாத விஷயங்கள். ஏனென்றால் ஒரு முறை தவறாக வாங்கி விடுவார்கள் அதேயே follow பண்ணுவார்கள். ஆனால் இப்போ தொடர்ச்சியாக நாங்கள் போராடி இதற்கான உத்தரவுகளையும் அரசினுடைய ஆவண காப்பகத்திலிருந்தும் மற்றும் பல்வேறு துறைகளிலிருந்தும் பெற்றிருக்கிறோம். இந்த குவாரியைச் சுற்றி மட்டும் கிட்டத்தட்ட பத்துக்கும் மேற்பட்ட வீடுகளும் மூன்று கோவில்களும் இருப்பது அரசினுடைய ஆவணங்களான வில்லேஜ் மேப், FMB, அ பதிவேட்டில் காட்டப்பட்டிருப்பதால்

மரியாதைக்குரிய செந்தில்குமார் அவர்களுடைய கல்குவாரிக்கு சட்டப்படி அனுமதிகொடுக்க முடியாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அனுமதி கொடுக்கக்கூடாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்ததாக DRSR வந்து இருக்கிறார்கள் ஒரு செண்ட் நிலம் ஒருத்தர் வாங்கினால் அதை சப்டிவிசன் பண்ணுகிறார்கள், ஆனால் இந்த குவாரி 10 வருடம், 20 வருடம், 30 வருடம் இயங்குது, இந்த குவாரிக்கு வாங்கும் போது 3 பார்ட் என்று எதற்கு வாங்குகிறார்கள்? ஏன் சப்டிவிசன் பண்ண முடியாது? ஒரு செண்ட் நிலத்துக்காரரே சப்டிவிசன் பண்ணுகிறார்கள் இவர்கள் அப்படி பண்ணதினாலே என்னன்னா எந்த இடத்தில் குவாரிபர்மிட் வாங்கி இருக்கிறார்கள் என்பது தெரியாது, நீங்கள் வரும் போதே கோயம்புத்தூரிலிருந்து வரும் போது பல குவாரிகளை பார்த்து இருப்பீர்கள், எந்த குவாரியிலுமே முதலில் பார்த்தீர்கள் என்றால் செயல்முறை ஆணையில் பெயர் பலகை வைத்திருக்க வேண்டும். எந்த பெயர் பலகையும் கிடையாது. இந்த குவாரி சைட் நாங்கள் பார்தத போது பெயர்ப்பலகை இல்லை. அதே போல திட்ட வடிவமைப்பாளர் பேசும் பொழுது சொன்னார் எல்லா லோடுகல் , M-sand, எல்லாம் தார்பாய் போட்டு மூட வேண்டும் என்று இந்த மூலையில் அரைமணி நேரம் நின்று பார்த்தோம் 30 வண்டி போனது ஒரு வண்டி கூட தார்பாய் கிடையாது. இங்கு குவாரி உரிமையாளரெல்லாம் வந்திருக்கிறார்கள் அவர்களின் ஆதரவாளர்களும் வந்திருக்கிறார்கள். எல்லாமே தார்பாய் போட்டு போகிறது என்று சொல்லட்டும், கிடையாது . அப்போ எதற்கு விதி? விதி என்பது காகிதத்தில் வைத்துக்கொண்டு அது சர்க்கரை என்றால் அது இனிக்குமா? நடைமுறைக்கு போனால் தானே இனிக்கும் தார்பாய் போட்டு கொண்டு போக வேண்டும் எதனாலே? அந்த தூசினால் நுரையீரல் பிரச்சனை மட்டுமல்ல நிறைய காற்று மாசுபாட்டினாலே type-2 சர்க்கரை வருகிறது என்பது எல்லாருக்குமே தெரியும் type-2 சர்க்கரை வருவது காற்று மாசுபாட்டினாலே, அந்த காற்றுமாசு, குவாரி, M-sand, கிரஷர் புகையினாலும், இது போன்ற சாலைகளில் கொண்டு செல்லும் பொழுது அந்த மாசினாலே தான் இங்கு இருப்பவர்களுக்கு சர்க்கரைநோய் வருகிறது. இந்த ஊரில் வேற தொழிற்சாலை கிடையாது. அப்போ இதையெல்லாம் கவனத்தில் வைத்துக்கொள்ளவேண்டியது இருக்கிறது. அது மட்டுமல்ல இந்த குவாரி புலத்தை சுற்றி 300 மீட்டர் தூரத்தில் தற்காலிக தொழிலாளர் குடியிருப்பு இருக்கிறது. அப்படி இருக்கக்கூடாது காரணம் பல்வேறு வெடி விபத்துகளில் பலபேர் இறந்து கொண்டிருக்கிறார்கள் அதனால் அப்படி வைக்கக்கூடாது என்று சட்டமே இருக்கிறது. ஆனால் இங்கே கூகுள் படங்களில் நிறைய தெரிகிறது. அதெல்லாம் இருக்கிறது. அதேபோல கூகுள் எல்லாம் நாங்கள் ஆதாரத்திற்கு எடுத்துக் கொள்ள மாட்டோம் என்று சார் சொன்னார்கள், PPT ல் கூகுள் படத்தை தான் கொடுக்கிறார்கள், காட்டுகிறார்க்ள.

இதில் எப்படி ஆதாரம் எடுத்தீர்கள் என்று தெரியவில்லை. ஏனென்றால் ஹைகோர்ட், சுப்ரீம் கோர்ட் மற்றும் SEIAA கூகுள் படத்தை ஆதாரமாக எடுத்துக்கொள்கிறது. , கோவை மாவட்ட நிர்வாகம் வேண்டுமானால் எடுத்துக்கொள்ளாமல் இருக்கலாம். ஏனென்றால் கூகுள் படங்களை பொறுத்த வரைக்கும் எதுவும் ஏமாற்ற முடியாது. இருக்கிறதை மறுக்கவும் முடியாது . இந்த குவாரியை சுற்றி 300 மீட்டர் சுற்றளவில் வடக்கு பகுதியில் 258 மீட்டரில் வீடு இருக்கிறது அதேபோல 213 மீட்டரில் இருக்கிறது, தெற்கு பகுதியில் 282 மீட்டரில் வீடு இருக்கிறது, தென்மேற்கு பகுதியில் 272, 263 மற்றும் 178 மீட்டரில் வீடுகள் இருக்கிறது, அதேபோல மேற்குபகுதியில் 167, 188, 149, 125, 130, 158, 115, 145 என்று மேற்கு பகுதியில் வீடுகள் இருக்கிறது. கிட்டத்தட்ட 10க்கும் மேற்பட்ட வீடுகள் கூகுள் படங்களில் இருக்கிறது. கூகுள் எர்த் என்று ஒரு ஆப் இருக்கிறது. அதில் போய் பார்த்தால் எல்லாருமே தெரிந்து கொள்ளலாம். . கூகுள் எர்த்ப்ரோவில் இது எல்லாமே காட்டப்பட்டிருக்கிறது. அதனாலே இங்கே வீடு, வீடுமனைகள் என்பதை பொறுத்தவரை கிராம வரைபடத்திலும் இருக்கிறது, கூகுள் படங்களிலும் இருக்கிறது. தற்காலிக வீடுகளும் இருக்கிறது. எனவே செந்தில்குமார் கல்குவாரிக்கு சிறு கனிம சலுகை விதிகள் 1959 பிரிவு 36 –ன் படி சட்டப்படி அனுமதி கொடுக்க முடியாது அதேபோல குவாரி புலத்திலிருந்து 500 மீட்டர் தூரத்திற்கு மேல் நிலை நீர்தேக்க தொட்டியோ, அல்லது நீர் எடுக்கக்கூடிய ஆதாரங்களோ எதுவும் இருக்கக்கூடாது என்று சிறு கனிம சலுகை விதிகள் பிரிவு 36ல் சொல்கிறார்கள் என்றால் உள்ளாட்சி மன்றங்கள், மத்திய அல்லது மாநில அரசு நிறுவனங்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் போன்ற முதன்மை பணிகளை மேற்கொள்ளுகின்ற அமைப்புகளில் ஏதாவது ஒன்றின் நீரேற்று அமைப்புகள், நீர் வழங்கும் ஏற்பாடு, அரசாங்கத்தினுடைய போரோ அல்லது மேல்நிலை தொட்டியோ 500 மீட்டரில் இருந்தால் கல் குவாரிக்கு அனுமதி கொடுக்க முடியாது, கொடுக்க கூடாது. விவசாயிகளின் ஆழ்துளை கிணறு கணக்கில் வராது. காரணம் வெடிவைத்தால் அதிர்ந்து போய் அது பாழாகி விடும், கட்டிடம் இடிந்து போய் விடும் என்பது தான். திட்ட வடிவமைப்பாளர் சொல்லி இருக்கிறார் குவாரியினுடைய கிழக்கு பகுதியில் 440 மீட்டரில் பச்சாபாளையம் இருக்கிறது என்று. நாங்கள் கணக்கு போட்டு பார்த்தால் 380 மீட்டரிலேயே இருக்கிறது. அப்போ 380 மீட்டரிலேயே மேல்நிலை தொட்டியும், தண்ணீர் எடுக்கும் இடங்களும் இருப்பதால் இந்த குவாரிக்கு சட்டப்படி அனுமதி கொடுக்கக்கூடாது, கொடுக்க முடியாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம். அதற்கு அடுத்தபடியாக இங்கு 45வகையான ஆவணங்கள் வைக்க வேண்டும். EIA வில் ஆனால் ஏற்கனவே 2021 ல் நடந்த அரசம்பாளையம், பச்சாபாளையம் குவாரிக்கெல்லாம் 45 வகையான டாக்குமெண்ட்

வைத்து இருக்கிறார்கள். ஆனால் இப்போ கொடுத்திருக்கிறதில் 15 வகையான டாக்குமெண்ட் கூட கிடையாது குறிப்பா வில்லேஜ் மேப் இல்லை, TOPO தான் இருக்கிறது. டோபோ ஸ்கெட்ச் தான் வைத்து இருக்கிறார்கள். டோபோ ஸ்கெட்ச் வைத்தால் எப்படி விபரம் தேய்ந்து கொள்ள முடியும்? கிராம வரைபடம் இருந்தால் தான் அதில் வீடு இருக்கிறது, ஓடை இருக்கிறது, சாலை இருக்கிறது, நடைபாதை இருக்கிறது எல்லாமே தெரியும். . அப்போ இந்த விபரங்களை நாங்கள் ஏற்கனவே நடந்த கருத்து கேட்பு கூட்டத்தினுடைய ஆவணங்களில் இருந்து வில்லேஜ் மேப் எடுத்து செக் பண்ணி பார்த்தோம் இப்படி கொடுத்தால் தானே சரியாக இருக்கும். மாசு கட்டுப்பாட்டு வாரியம் இணையதளத்தில் ஏற்றுகிறார்கள். தயவுசெய்து 45 வகையான ஆவணங்களையும் இணையத்தில் ஏற்ற வேண்டும் என்று கோரிக்கை வைக்கிறோம். தொடர்ச்சியாக கோரிக்கை வைத்து பலவற்றை நிறைவேற்றி இருக்கிறார்கள். ஏற்கனவே EIA அறிக்கை ஏற்றமாட்டார்கள். 2021 ல் நாங்கள் போராடிய பின் தான் குறிப்பாக கிணத்துக்கடவிலே 10 முத்தூரில் முதன் முதலாக இணையத்தில் ஏற்றினார்கள். அக்டோபர் 2 ந்தேதி 2021 ல்ஆங்கிலத்தில் ஏற்றினார்கள். தமிழில் ஏற்ற வேண்டும் என்று சொன்னோம் அதையும் ஏற்ற தொடங்கினார்கள் இதையும், அதாவது கொடுக்கக் கூடிய அத்தனை ஆவணங்களையும் 45 வகையான டாக்குமெண்டுகளையும் பதிவேற்ற வேண்டும். ஏனென்றால் யார் வேண்டுமானாலும் இதை வந்து எடுத்து பார்த்து சரிபார்த்துக் கொள்ளமுடியும். (குறுக்கீடு )அடுத்ததாக குவாரி வந்து நைட் முழுவதும் பிரேக்கர் வைத்து உடைக்கிறார்கள் என்று சொன்னார்கள். காலை 7 முதல் 5 தான் குவாரி இயங்ககூடிய நேரம் 5 மணிக்கு மேலே லோடே ஏற்றக்கூடாது. அப்படி ஏற்றினால் அது சட்டவிரோத செயல்பாடு. அப்படி பண்ணினால் குவாரியினுடைய அனுமதி ரத்து பண்ண வேண்டும் என்று செயல்முறை ஆணையில் கொடுத்து இருக்கிறீர்கள். ஆனால் இங்கே குடியிருக்கவே முடியவில்லை என்று மக்கள் சொல்கிறார்கள். இதையெல்லாம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். அதே மாதிரி வெடிவைப்பது திட்டவடிவமைப்பாளர் சொன்னார் மதியம் 1 லிருந்து2 வரைக்கும் தான் வெடிவைப்போம் என்று அதுவும் நானெல் வெடியை மட்புல் முறையில் தான் வைக்கிறோம் என்று அப்படி எல்லாம் ஒன்று இருக்கிறதா என்று ஆய்வு செய்ய வேண்டும்.

அதையும் நடைமுறை படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். அதற்கு அடுத்த படியாக கம்பிவேலி, அனைத்து இயங்கி கொண்டுள்ள குவாரிகள், இயங்கி முடித்த அத்தனை குவாரிகளும் கம்பிவேலி போட வேண்டும் ஏனென்றால் DMF இதற்கு பணம் ஒதுக்குகிறார்கள் District Mining Fund (DMF) இருக்கிறது. ஏனென்றால்

நூற்றுக்கணக்கானவர் உயிர்கள் சாகிறது பூராவும் இறக்கிறார்கள் . எளிய மக்கள், விவசாயிகள், முந்தாநாள் கூட மடத்துக்குளத்தில் ஒரு சிறுமி இறந்து விட்டார்கள், போனவாரம் திருப்பூரில் ஒருவர் இறந்து விட்டார். இங்கு வேலம்பாளையத்தில் இறந்து போய் விட்டார்கள். ஏகப்பட்ட இறப்பு ஏற்படுகிறது, காரணம் இதை அரசு செய்ய வேண்டும். தலைமை செயலாளர் உத்தரவு இட்டும் இருக்கிறார்கள் , நிதி ஆதாரத்தை கொடுத்தும் செய்யாமல் இருக்கிறது. உடனடியாக அனைத்து கல் குவாரிகளும் இயங்கி கொண்டிருக்கிற, இயங்கி முடித்த அத்தனை கல் குவாரிகளும் கம்பி வேலி அமைத்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். அதே போல சாலைகளில் சரியான எடையோடு வாகனங்கள் கொண்டு செல்வதை உறுதி படுத்த வேண்டும். அப்படி இல்லை என்றால் டெல்லி உச்சநீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு 2003 ரிட்பெட்டிஷன் 1936/2003 உத்தரவு இப்போது மீண்டும் 2023 ல் உத்தரவிட்டு ஒன்றிய அரசினுடைய மரியாதைக்குரிய தேசிய நெடுஞ்சாலை மற்றும் சாலை போக்குவரத்து அமைச்சர் நிதின்கட்கரி உத்தரவிட்டுள்ளார். தமிழ்நாடு டிரான்ஸ்போர்ட் கமிஷனர் எல்லோருக்கும் சுற்றறிக்கை கொடுத்து உள்ளார். ஏனென்றால் மக்களுடைய வரிப்பணம் பாழாகிக் கொண்டிருக்கிறது. அது பச்சாபாளையத்தில் போனாலும் சரி செட்டிபாளையத்தில் போனாலும் சரி, அரசம்பாளையத்தில் போனாலும் சரி. (குறுக்கீடு)அதேபோல குவாரி அமைகின்ற புலத்திலிருந்து சுற்றி 10 மீட்டர் அருகாமையில் கல்குவாரி இருந்தால் கல் வெட்டி எடுக்கக்கூடாது. பட்டா நிலமாக இருந்தால் 7.5 மீட்டர், புறம்போக்கு நிலமாக் இருந்தால் 10 மீட்டர். ஆனால் செந்தில்குமார் அனுமதி கேட்டிருக்கக்கூடிய புலத்தின் அருகில் உள்ள சைட் இதனுடைய தென்கிழக்கு பகுதியில் பார்த்தீர்களானால் அதிகப்படியான கனிமங்களை வெட்டி எடுத்திருக்கிறார்கள். இதை நான் சொல்லவில்லை அவர்களே படத்தில் கொடுத்திருக்கிறார்கள். 7.5 மீட்டர் தள்ளி எடுக்கிறேன் என்று சொல்லி இருக்கிறார்கள். அந்த 7.5 மீட்டரையும் எடுத்திருக்கிறார்கள், வெளியிலும் 20 மீட்டருக்கு மேலே எடுத்திருக்கிறார்கள். இது பல கோடி மதிப்பிலான கனிமங்கள், அது மட்டுமல்ல இதற்கான சட்டவிரோத வெடிமருந்துகள் எங்கிருந்து வந்தது. ஏனென்றால் மண்ணை தோண்டுவது போல் ஜேசிபி வைத்து தோண்ட முடியாது. இதற்கு வெடிமருந்து வேண்டும். சட்டவிரோத வெடிமருந்து எங்கிருந்து யார் மூலம் பெற்றார்கள்? என்பதையும் கணக்கீடு செய்து இதற்காக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். இங்கே ஏற்கனவே மிக அதிக வெப்பத்தால் பள்ளிக்கூடம் 15 நாள் லீவு விட்டு விட்டார்கள். காரணம் கல் குவாரிகள் மிக அதிகமாக அனுமதிக்கப்பட்ட அளவைவிட வெட்டி எடுப்பதாலும் அதிகமான பரப்பளவில் இருப்பதாலும் வெப்பம் அதிகமாகி இங்கு காலநிலை

மாற்றம் மட்டுமல்ல காலநிலை பிறழ்வும் ஏற்பட்டு மாசுக்கட்டுப்பாடு அதிகாரிகளை வருடம் 3 தடவை, 4 தடவை முதல்வரே கூப்பிட்டு மாநாடு நடத்துகிறார். எனவே இந்த நிலை என்பது இந்த சட்ட விரோதமான முறையில் சட்டத்திற்கு உட்பட்டிருந்தால் யாரும் எதுவும் பேச முடியாது. சட்டத்திற்கு புறம்பாக, விதிகளுக்கு புறம்பாக இருப்பதைத் தான் நாங்கள் சுட்டி காட்டுகிறோம். எனவே அதன்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்கனவே பக்கத்தில் வயநாடு நிலச்சரிவு ஏற்பட்டது நமக்கு தெரியும், 2010 ல் மாதவ்காட்கில் அறிக்கையில் சொன்னார்கள். அதுபோல சமீபத்தில் இறந்து போன மரியாதைக்குரிய இஸ்ரோ தலைவர் கஸ்தூரிரங்கன் சார் அவர்களும் இதுபோல் நிலச்சரிவு அபாயம் இருக்கிறது என்று சொன்னார்கள். அதை கண்டு கொள்ளாத நிலையில் 15 வருடங்கள் கழித்து நிலச்சரிவு ஏற்பட்டது. இங்கேயும் இந்திய இஸ்ரோ நிறுவனம் இந்தியாவில் 146 இடங்களில் நிலச்சரிவு ஏற்படக் கூடிய அபாயம் உள்ளது அதில் ஒன்று இந்த பகுதி. எனவே இங்கு இயற்கையை சிதைப்பது என்பது இயற்கையிலிருந்து வளங்களை எடுப்பது என்பது இயற்கை தன்னை மீண்டும் தகவமைத்துக்கொள்ளும் விதத்தில் தான் எடுக்க வேண்டும். இயற்கையை அதிகப்படியாக சுரண்டினால் நிலச்சரிவு ஏற்படும்.ஏற்கனவே இங்கே மதுக்கரையில் நில அதிர்வு ஏற்பட்டிருக்கிறது. திருப்பூர் மாவட்டத்தில் போன மாதம் கலெக்டர் ஆபீசை ஒட்டியே 3 ரிக்ட்டர் அளவுக்கு நில அதிர்வு ஏற்பட்டது. இப்படியான நிலையில் தமிழ்நாடு இருக்கிறது. தொடர்ச்சியாக நில அதிர்வு ஏற்படுகிறது. திண்டுக்கல் மாவட்டத்திலே வருடத்தில் 3 தடவை, 4 தடவை (குறுக்கீடு). எனவே இந்தகு வாரிக்கு அனுமதி கொடுக்கக்கூடாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.எனவே இந்த செந்தில்குமார் குவாரி என்பது முழுக்க முழுக்க சட்ட அடிப்படையில் கிடையாது. சட்ட அடிப்படையிலும், விதிகளின் அடிப்படையிலும் கிடையாது. ஒரு சிலர் என் மீது விமர்சனம் சொன்னார்கள் நல்ல அதிகாரியை பாராட்டுகிறோம். தப்பு பண்ணினால் தப்பு பண்ணினார் என்று தான் சொல்ல முடியும்.எந்த அதிகாரியாக இருந்தாலும் நேருக்கு நேராகத்தான் சொல்லுவோம். SEIAA–வினுடைய சேர்மனிடம் சொன்னதைத்தான் இங்கு நான் பதிவு பண்ணினேன். ரகசியமா வெளியே எங்கோ பேசியது அல்ல. நான் பேசியது தவறென்றால் அவரே என் மீது நடவடிக்கை எடுத்திருப்பார். அவர்கள் தப்பு பண்ணியிருக்கிறார்கள்,குற்றம் பண்ணியிருக்கிறார்கள். குவாரி(குறுக்கீடு) சட்ட அடிப்படையில் இந்த செந்தில்குமார் குவாரி இல்லை என்பதால் இதற்கான அனுமதியை கொடுக்கக்கூடாது, கொடுக்க முடியாது, அப்படி எந்த அதிகாரி கொடுத்தாலும் அவர்கள் சட்டத்தின் படி தண்டிக்கப்படுவார்கள் என்பதை தெரிவித்துக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி. வணக்கம்.

8. <u>திரு.கார்த்திக்</u>

அனைவருக்கும் வணக்கம். அய்யா சொன்னது போல இயற்கையை அழித்து கிரஷர் மூலமாக வரும் M–சாண்டிலும் , ஜல்லியிலும் கட்டப்பட்டுள்ள நிழலில் இந்நேரம் வரை ஐயா அவர்கள் பேசியதற்கு எங்கள் கிரஷர் தான் உதவி புரிந்திருக்கிறது. அவர் இன்று வீட்டுக்கு செல்லும் போது கூட சாலையில் குண்டும், குழியும் இல்லாமல் செல்வதற்கு எங்கள் கிரஸெர் தான் உதவுகிறது. அது போக ஐயா அவர்கள் இயற்கையை அழித்து, பருத்தி நூலில் இருந்து பருத்தி பூச்சிகளையும் அழித்து, சட்டை தைத்து போட்டுக்கொண்டும்,மேலும் அவர் இயற்கையை அழித்து, தோல் பொருட்களில் இருந்து வருகின்ற செருப்பை அணிந்து கொண்டும், சாயப்பட்டறையில் சென்று விவசாயிகளுக்கே உரித்தான பச்சை கலர் சாயத்தை உபயோகித்து நீர் வளங்களை கெடுத்து உள்ளார் இயற்கையை என்னவோ நாங்கள் மட்டும் தான் அழிக்கிறோம் என்று கூறுகிறார்கள். ஒரு ஏக்கர் விவசாயநிலம் பெரியகுயிலியில் முதலில் வெறும் 5 லட்சம் ரூபாய்க்கு கூட விற்கவில்லை. 2 லட்சத்திற்கு விற்றுக் கொண்டிருந்தது 15, 20 வருடங்களுக்கு முன்னால். இங்கே கிரஷர் ஆரம்பித்து தொழில் வளம் பெருகி ஆயிரக்கணக்கான வெளியூர் நபர்கள் வந்து தங்கி அரசுக்கு வருவாய் ஏற்படுத்தி உள்ளார்கள். இப்படியெல்லாம் உள்ளதால் ஐயாவினுடைய விவசாய நிலம் இன்று 1.5 கோடிக்கு விற்கிறது. அதற்கு காரணமும் நாங்கள் மட்டும் தான். விவசாயத்தில் ஒரு 2 ஏக்கர் நிலத்தில் விவசாயம் புரிந்தால் அந்த விவசாய நிலத்தில் இரண்டு குடும்பம் மட்டுமே பயன்பெறும். ஆனால் எங்கள் கிரஷருக்கு அனுமதி கொடுத்தால் அரசுக்கு வருவாய் கொடுப்பதோடு மட்டுமல்லாமல் மேலும் 1000 பேருக்கு மேல் வேலை வாய்ப்பும், பொருளாதார வளமும் பெருகும். இதோடு மட்டுமல்லாமல் ஐயா சொன்னது போல FMB ஸ்கெட்சிலே எப்படி இருக்கிறது என்று ஆதாரங்களை எடுத்து காண்பித்தார், அரசு அதிகாரிகளுக்கு எந்த விதியும் தெரியாது என்று கூறுகிறார். அவர்களுடைய அனுபவத்துக்கு 1000 கணக்கான குவாரிகளை அனுமதி கொடுத்திருப்பார்கள். சட்டத்திற்கு மீறி அவர்கள் அனுமதி கொடுத்தால் அவர்களுடைய பதவியும் ரத்து செய்யப்படும். சட்டத்துக்கு மீறி கிரஷரில் இவர்கள் சொன்னது போல கனிமவளங்களை கொள்ளை அடித்தால் சட்டப்படி அவர் சிறைக்கும் செல்ல நேரிடும், அபராதமும் விதிக்கப்படும். ஒரே ஒரு கருத்து தான் முக்கியமாக சொல்ல வேண்டும். FMB ஸ்கெட்சிலே எல்லாம் அப்டேட் பண்ணி பல வருடம் ஆகி விட்டது. FMB ஸ்கெட்ச்சிலே எங்க ஊர் கிராமத்திலே ஒரு தாத்தா கட்டிய வீடு இருக்கிறது. ஆனால் இப்போ போய்

பார்த்தால் அந்த வீடு இல்லை இடிந்து போய் அந்த இடத்தில் காலி இடம் இருக்கிறது. அதே மாதிரி கூகுள் மேப்பிலே அவினாசி சாலையில் லீ மெரிடியன் ஹோட்டல் உள்ளது. அதே VAO ஆஃபிஸில் போய் பார்த்தீர்களானால் அந்த இடத்தில் ஒரு பழைய வீடும்,ஒரு தோட்டம் மட்டும்தான்அந்த இடத்தில் இருந்தது. அதனால் காகிதங்களை மட்டும் வைத்து ஆதாரங்களை கொள்ளாமல் நேரடியாக களஆய்வு செய்து விதிகளுக்கு உட்பட்டு இருந்தால் மட்டுமே கொடுங்கள் என்று நாங்கள் கூறுகிறோம். அதற்காக வாழ்வாதாரத்தை அழித்து ஒரு தனிநபருடைய தூண்டுதலின் காரணமாக இம்மாதிரி நிகழ்வுகளுக்கு யாருக்கும் இடம் கொடுத்து விடக்கூடாது. வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லை என்றால் ஓட்டுபோட முடியாது நம்மால். ஆனால் உண்மையிலும் அவர் நேராக வருகிறார் அவரிடம் ப்ரூப் இருக்கிறது, உங்கள் பெயர் பட்டியலில் இல்லை என்று சொல்லி வாக்காளருக்கு உரிமை மறுக்கப்படுவது எவ்வளவு பெரிய ஜனநாயக கொடுமையானதோ அதேபோல காகிதத்தில் இருக்கும் ஆதாரங்களை மட்டும் வைத்துக்கொண்டு அனுமதி மறுக்கப்படுவதும் ஒரு ஜனநாயக படுகொலைக்கு சமமாகும்.ஆகவே,நேரடியாக களஆய்வு செய்து மேலும் FMB , கூகுள் எல்லாமே அப்டேட் பண்ண வேண்டும். அப்டேட் பண்ணாமல் இவர்கள் பழைய பேப்பர்களை வைத்துக்கொண்டு இதற்கு அனுமதி கொடுக்காதீர்கள், அதற்கு அனுமதி கொடுக்காதீர்கள் என்று சொல்வது சரியாக வராது, அப்புறம் பார்த்தால் அப்படியே அனுமதி கொடுத்து அதை கண்காணிப்பதற்கு இன்றைக்கு நூற்றுக்கணக்கான அதிகாரிகளை அரசு நியமித்து இருக்கிறது. அவர்கள் வருடம் வருடம் 40 டிப்பார்ட்மென்டுக்கு மேலே NOC வாங்கினால் தான் ஒரு கிரஷர் ஓபன் பண்ணமுடியும். கிரஷருக்கு டிரைவராக போறவனுக்குக் கூட பொண்ணு கொடுத்து விடுவான் போலிருக்கிறது, கிரஷர் வைத்திருப்பவனுக்கு யாரும் பொண்ணு கொடுப்பதில்லை. அந்த நிலைமையில் தான் தொழில் ரொம்ப மோசமாக போய்க்கொண்டு இருக்கிறது. அதனால் வாகனங்களில் செல்வதால் விபத்து ஏற்படுகிறது, மருந்துகள் உட்கொள்ளுவதால் சைடு எபெக்ட் ஆகிறது, ஏன் விவசாய நிலங்களில் பூச்சிகொல்லி அடிப்பதால் மண்வளம் கெடுகிறது, அதற்காக விவசாயம் செய்யாமல் இருக்க முடியாது. தேங்காய் போடப்போகும் போது மரம் ஏறி ஒருவன் கீழவிழுந்து செத்துவிட்டான் என்றால் அதற்காக தேங்காய் சாப்பிடாமல் இருக்க முடியாது. விவசாயிகளுக்கு தயவுகூர்ந்து ஒன்றை கூறிக்கொள்கிறேன், தென்னைமரம் இருக்கிறது, பனைமரம் இருக்கிறது, பக்கத்திலே சாலை இருக்கிறது, ஒரு மட்டை விழுந்தால் டூவீலரில் போறவன் ஒருவன் செத்து போய் விடுவான், அதுக்காக நாங்கள் தென்னை மரங்களையெல்லாம் அழித்து விடுங்கள் என்று சொல்கிற மாதிரி சட்டத்திற்கு உட்பட்டு இருந்தால் மட்டும்தான் கொடுங்கள் என்று நாங்கள்

சொல்கிறோம்.தனிப்பட்ட காரணங்களுக்காக சொல்லவில்லை. நாங்கள் கோரிக்கை வைப்பது என்னவென்றால் இந்த கிரஷருக்கான சட்ட திட்டங்களையும் கொஞ்சம் குறைத்து தாராளமாக்கி விட்டால் தொழில் நன்றாக இருக்கும் என்பது எங்களுடைய கருத்து. என்ன காரணமென்றால் 10 குழந்தைகள் ரோட்டிலே விளையாடிக்கொண்டிருந்தது. ஒரு குழந்தை பார்க்கில் விளையாடிக்கொண்டிருந்தது, பேருந்து வேகமாக வந்தது, பிரேக் பிடிக்கவில்லை, ஒன்று ஒரு குழந்தை மேல் ஏற்றி கொல்ல வேண்டும் இல்லை என்றால் 10 குழந்தைகள் மேல் ஏற்றி கொல்ல வேண்டும். அந்த ஓட்டுநர் என்ன முடிவு எடுப்பார் என்றால் 10 குழந்தைகள் வேண்டாம், பார்க்கில் விளையாடும் ஒரு குழந்தையை கொன்று விடுவாராம். அந்த மாதிரி சட்டப்படி பார்க்கில் விளையாடிக்கொண்டிருந்தது ஒரு குழந்தை அது சட்டப்படி தான் விளையாடிக்கொண்டிருந்தது. ஆனால் ரோட்டில் விளையாடிக்கொண்டிருந்த 10 குழந்தைகளுமே சட்டத்தை மீறி தான் விளையாடிக்கொண்டிருந்தது. ஆனால் நாம் என்ன செய்கிறோம் என்றால் ஏதோ ஒரு காரணத்திற்காக அந்த ஒரு குழந்தையை கொன்று 10 குழந்தையை காப்பாற்றுவது மாதிரி நினைத்துக்கொண்டு சட்டப்படி செய்யும் எங்களை தண்டிக்காதீர்கள். இரண்டாவது ஆற்றுமணலை தடை பண்ணி விட்டீர்கள். ஆற்றுமணல் எடுக்க முடிவதில்லை. சரி விட்டு விடலாம் ஆற்றுமணல் இல்லை, M-sand , P-sand வைத்து தான் கட்டவேண்டும் என்றால் கிரஷரும் கொண்டுவர வேண்டாம் என்கிறீர்கள். சரி இங்கே வேண்டாம் என்று கிணத்துக்கடவிலிருந்து வந்தது என்றால் 20000 ரூபாய்க்கு கொடுப்பதை 25000 வாடகை போட்டு கொடுக்கிறார்கள். அதுவும் பொதுமக்களுக்கு பாதிப்பு சரி அதுவும் வேண்டாம் சாலையாவது போட்டு இருந்து கொள்ளலாம் என்றால் யாரும் பொண்ணு தரமாட்டேன் என்கிறார்கள். சாலை போட்டு இருந்தால் யாரு பொண்ணுதருவா? அதனாலே தயவுகூர்ந்து எங்களுக்கு கிரஷருக்கு அனுமதி தந்து அனைவருக்கும் வேலை வாய்ப்பு ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல் அரசுக்கும் வருவாய் ஏற்படுத்தி தரவேண்டும் என்று தங்களை தாழ்மையுடன் கேட்டு விடைபெறுகிறேன்.

9. <u>திரு.இராம்</u>

எல்லாருக்கும் வணக்கம். நான் செட்டிபாளையத்திலிருந்து வருகிறேன். கல்குழிக்கு லைசென்ஸ் கொடுத்தால் பரவாயில்ல ஏன் என்றால் பொருட்கள் நிறைய தட்டுப்பாடு இருக்கிறது. குவாரி லைசென்ஸ் கொடுத்தால் எல்லாருக்கும் ரொம்ப உபயோகமா இருக்கம் . நன்றி.

10. <u>திரு.பேச்சிமுத்து</u>

என் பெயர் பேச்சிமுத்து. சூலூர். திரு.செந்தில்குமார் அவர்களுக்கு கல்குவாரிக்கு அனுமதி கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அவருக்கு அனுமதி கொடுத்தால் பக்கத்திலுள்ள குடும்பங்களுக்கு வாழ்வாதாரம் பெருகும் என்பதை மிகவும் கேட்டுக்கொள்கிறேன்.

11. <u>திரு.கருப்புசாமி</u>

என் பெயர் கருப்புசாமி. சூலூர். செந்தில் எக்ஸ்ப்ளோசிவ்ஸ் பண்றோம். கல்குவாரியில் நானால் போட்டு முறையாக, ப்ளாஸ்டர் வைத்து முறையாகத்தான் பண்றோம். அதனாலே R.S. செந்தில்குமார் அவர்களுக்கும், ஷண்முகம் அண்ணன் குவாரிக்கும் லைசென்ஸ் கொடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன் நன்றி. வணக்கம்.

12. <u>திரு.விஜயகுமார்</u>

என் பெயர் விஜயகுமார். சூலூரிலிருந்து வருகிறேன். செந்தில் அண்ணனுக்கு லைசென்ஸ் கொடுத்தால் பலகுடும்பங்கள் வாழும் அவருக்கு லைசென்ஸ் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் நன்றி.

13. <u>திரு.சதீஷ்குமார்</u>

எல்லோருக்கும் வணக்கம் என் பெயர் சதிஷ்குமார். ஊர் பெரியகுயிலி. கற்களின் தேவை அதிகமா இருக்கு. இப்போ கோவை மாவட்டத்திலே கற்களின் தட்டுப்பாடு அதிகமா இருக்கிறதினாலே தான் அருகில் உள்ள மாவட்டத்தில் இருந்து கற்கள் இங்கே வருகிறத. அதனாலே கற்களின் விலையெல்லாம் அதிகமா ஆகுது. மக்களோட தலையில் தான் அது திணிக்கப்படுகிறது. அதனாலே எவ்வளவு சீக்கிரம் லைசென்ஸ் கொடுக்க முடியுமோ கொடுத்தா நல்லா இருக்கும்.

14. <u>திரு. நந்தகுமார்</u>

எல்லோருக்கும் வணக்கம். என் பெயர் நந்தகுமார். இதே பகுதி பெரியகுயிலி கிராமத்தை சார்ந்தவன். விவசாயம் செய்கிறேன். அதுபோக லாரிதொழில் பண்ணிக்கொண்டிருக்கிறோம். அண்ணன் செந்தில்குமார், ஷண்முகம் ஐயா வந்து

கிட்டத்தட்ட முதல் அனுமதிக்காக அப்ளை பண்ணல இதுக்கு முன்னாடியே அவர்கள் பலமுறை அனுமதி பெற்று தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு கல் உடைத்திருக்கிறார்கள். ஒன்றிரண்டு சின்ன சின்ன பிரச்சனைகள் வரும்போது நாங்கள் நேரில் பார்த்து பேசி சரி செய்து கொள்வோம். அவர்களும் உரிய மரியாதை கொடுத்து, பக்கத்து காட்டுக்காரர்களை எல்லாம் அனுசரித்து செய்து கொண்டிருக்கிறார்கள். விவசாய மக்களுக்கும் அதை தாண்டி கிழக்குபுறம் வள்ளியம்மாள் அவங்க குரூப் கல்லு குழியெல்லாம் இருக்கிறது, சின்னசாமி ஐயா கல்லுகுழியெல்லாம் இருக்கிறது. அதனாலே இவங்க வந்து, இவங்களுக்கு முன்னாடியே விவசாய பகுதியிலே பல கல்லு குழியெல்லாம் இருக்கிறது. அதனாலே இவர்களுக்கு அனுமதி கொடுப்பதற்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. இதுக்கு முன்னாடி அவங்க பச்சை துண்டு போட்டு முகிலன் ஐயா வந்தாரு. ஒரு சமூக ஆர்வலர் மாதிரி நடக்கிறார் என்றால் இல்லை. எந்த ஒரு சமுதாய அக்கறையும் இருக்கிறதில்லை, இதை ஒரு பிசினெஸ்ஸாகவே அவர் பண்ணிட்டார். இதை சுற்றுசூழல் பாசறை சார்பாக வன்மையாக கண்டிக்கிறோம். விவசாயி என்ற போர்வையில் பச்சை துண்டை உடுத்தி பொது மக்களை ஏமாற்றுவது, கல்குவாரிகாரர்களுக்கு கமிஷன் பேசுவது இந்த மாதிரி அவர் செய்து கொண்டு இருந்தார் என்றால் பொதுமக்கள் சார்பாக யாருமே கேட்க மாட்டாங்க. இதை வன்மையாக கண்டிக்கிறோம். நீங்கள் அதிகாரிகள் இந்த பதிவை அவர்கிட்ட சமர்ப்பிக்க சொல்லி கேட்டுக்கொள்கிறேன். பாருங்கள் அண்ணன் முன்னாடிதான் உட்கார்ந்து இருக்கிறார். ஆடுமாடு மேய்த்து விட்டு இன்னமும் விவசாயம் தான் செஞ்சுகிட்டு இருக்கிறார். 5 மாடு வைத்து இருக்கிறார். மாட்டுக்கு ஊசி போட்டு இருக்கிறார். அவர் தான் உண்மையான விவசாயி. அவர் கார்பொரேட் விவசாயி.அவர் சொல்றத நீங்கள் கருத்தில் எடுத்துக்காதீங்க.திரு.செந்தில்குமார் கல்லுக்குழியை ஒட்டியே 100 மீட்டரில் தான் சின்னக்கண்ணு மாமா அவரு கல்லுகுழியும் இருக்குது. அவரு அனுமதி கொடுக்கிறார். அவர் கல் ஒடச்சுக்கிறதுக்கு அவர் அனுமதி கொடுக்கிறார். அவர் அப்ஜெக்க்ஷன் தெரிவிக்கற மாதிரி இருந்தால் அவரை இப்போவே தெரிவிக்க சொல்லுங்க. எங்கள் அண்ணன் நிக்கிறார். அண்ணன் குவாரியோட கிழபுறமாத்தான் எங்கள் தோட்டம் இருக்குது. விவசாயம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அவர்கள் 15, 20 வருஷமா குவாரி செய்து இருக்கிறார்கள். எங்களுக்கு எந்த பாதிப்பும் இருக்கிறதில்லை. முதலிலாவது கொஞ்சம் புகை வந்து கொண்டிருந்தது இப்போ எல்லாம் அரெஸ்ட் பண்ணிட்டாங்க. நல்ல படியாத்தான் பண்றாங்க என்ன குவாரி நானெல் வெடி போடணும், கொஞ்சம் மழைக்காலத்திலே வந்து கொஞ்சம் பாத்து வைக்கணும் கல்லு கொஞ்சம் அதிகமா வெடிச்சுவந்திடும் அந்தடைம்ல வேட்ட கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணி

வைக்கணும். மற்றபடி நேரங்கள் டைமிங் பக்கத்து காட்டுக்காரங்களை கேட்டு அனுசரிச்சு வெசசாங்கன்னா பரவாயில்லை. பாருங்கள் குப்புசாமி மாமா வந்திருக்கிறார். செந்தில்குமார் அண்ணன் கல்லுக்குழியை ஒட்டியே வடபுற தோட்டம் தான் அவரு விவசாயம் பண்ணுறார். கோழிப்பண்ணை வைத்திருக்கிறார். அப்ஜெக்ஷன் தெரிவிக்கற மாதிரி இருந்தால் அவரையும் இப்போதே கேட்டு நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள். அவர் ஒன்னும் சொல்லலை அவரை தாண்டி 300 மீட்டர் 400 மீட்டர் தூரத்திலே இருக்கிறவங்களுக்கு பாதிக்கப்படுதுன்னு சொல்கிறார். 380 மீட்டர் தூரத்தில் ஒரு borewell இருக்குது அது பாதிக்கப்படுதுன்னு சொல்கிறார். இவங்க தோட்டத்திலே 50 மீட்டரில் போர் வெல் இருக்குது. இதுக்கு முன்னாடி 2 லைசென்ஸ்க்கு அப்ளை பண்ணி எந்த பாதிப்பும் வந்தது இல்லை. இவங்க எந்த புகாரும் கொடுத்தது இல்லை. ஏன்னா இது எங்கள் வாழ்வாதார தொழில். நாங்கள் படிச்சது, சாப்பிட்டது எல்லாமே இதே தொழில்தான். இன்னைக்கு புதுசு புதுசா எல்லாம் வந்துட்டாங்க மாத்தி பேச முடியாது. சின்ன சின்ன பிரச்சனைகள் குவாரியில் இருந்தது. அதை நாங்கள் எல்லாமே பேசி தீர்த்து விட்டோம். மற்றபடி எந்த ஆதாயத்துக்காகவும், எந்த சுயநலத்துக்காகவும் சொல்லவில்லை. பொதுமக்களுக்கு சில இடையூறுகள் இருக்கிறது. கல் கிடைக்கிறதில்லை இப்போ 15 நாளா ஸ்ட்ரைக் ஆகி போச்சு எந்த பொருளுமே கிடைக்காம நிறைய பேர் வடநாட்டிலிருந்து வந்து ஹிந்திக்காரனெல்லாம் வேலை இல்லாமல் பாதிக்கப்பட்டு சாப்பாடு இல்லாமல் உட்கார்ந்திருக்கிறான். அவனுக்கு கல், ரா மெட்டீரியல் போய் சேர்ந்ததுனால தான் வாழ்வாதாரம் இருக்கும். நேரடியா இதை நம்பி நிறைய குடும்பங்கள் வாழ்வாதாரம் இருக்குது. அதனாலே குவாரிக்காரரும் அனுசரிக்க வேண்டும். பொது மக்களுக்கு , சுற்று சூழலும், நீர் மாசு, ஒலிமாசு இதெல்லாம் கவனத்தில் வைத்து நைட் எல்லாம் உடைக்காமல் பகலில் மட்டும் உடைத்து பொதுமக்களுக்கு இடையூறு பண்ணாமல் செய்து கொள்ளுங்கள். அது போக விலைகளும் அனுசரிச்சு, கண்ணா பின்னான்னு ஏறிக் கொண்டே போய்க்கொண்டிருக்கிறது. அதை கொஞ்சம் அனுசரித்து அற வழியில் உங்களுக்கு தேவையான லாபங்கள் வைத்து கவெர்மென்ட் நார்ம்ஸ் படி எல்லாமே procedure படி பண்ணிக்கோங்க. ராய்லட்டி கட்டுங்கள். எல்லாமே procedureபடி பர்மிட் போட்டுங்கோங்க முடிஞ்சா weigh பிரிட்ஜ் கூட வைத்துக் கொள்ளுங்கள். எல்லாமே procedure படி பண்ணுங்க. எல்லாமே வொயிட்ல பண்ணற மாதிரி கொண்டு வந்துருங்க அப்பத்தான் இதுக்கு நிரந்தரமான தீர்வு கிடைக்கும். பொதுமக்களுக்கு எல்லாமே பாதிப்பு. இதை பயன்படுத்தி ஒவ்வொரு குவாரிகாரரையும் பயன்படுத்தி ஒவ்வொரு officers எல்லாமே மிரட்டுகிறார்கள். நாங்கள் பப்ளிக் பார்த்துக் கொண்டேதான் இருக்கிறோம். குவாரிக்காரர்கள் என்ன தப்பு பண்கிறார்கள்? அப்படி என்ன பெரிய

கள்ளக்கடத்தல் பிசினஸ் பண்றாங்க? எல்லா பெர்மிசன்ஸ் கரெக்டா எல்லா ஆஃபீஸர்ஸ் கொடுத்து விட்டு போய் விட்டால் அவர்கள் பாட்டுக்கு ப்ராப்பரா பண்ணிக்க கொண்டே போய்கிட்டு இருப்பாங்க. இதுக்குள்ளேயும் ஒரு செக் வைக்கிறது. அப்புறம் குவாரிக்காரரை பிடித்து மிரட்டுவது, கிரசர்காரரை பிடித்து மிரட்டுவது எங்களை போன்ற லாரிகாரங்க எனக்கு குவாரி இல்ல எதுவுமே இல்ல ஆனா லாரி வைத்திருக்கிறேன் லாரி வைத்திருப்பவனெல்லாம் எப்படி தொழில் பண்ணுவான்? எல்லாமே ஒன்னொன்னா ப்ராப்பரா பண்ணி ப்ராப்பரா கொடுங்க இவங்களுக்கு சீக்கிரம் அனுமதி கொடுத்து பொது மக்களுக்கும் சமுதாயத்திற்கும் ஒரு நல்ல வழி கிடைக்க இந்த பெரியகுயிலி பொதுமக்கள் சார்பாக வேண்டி கேட்டுக் கொள்கிறேன் நன்றி வணக்கம்.

15. <u>திரு.சதீஷ்குமார்</u>

சதிஷ்குமாருங்க. இதே ஊர்தான் பெரியகுயிலி, லாரி தொழில் பண்ணிட்டு இருக்கேன். குவாரிக்கு லைசென்ஸ் கொடுக்கறதிலே எந்த ஆட்சேபனையும் இல்லைங்க, ஒரே கோரிக்கை என்னண்ணா உள்ளூர் மக்களுக்கு கொஞ்சம் சப்போர்ட் பண்ணுங்க. இதுவரைக்கும் முன்னாடி நடந்ததிலே அவர்களும் சரி நீங்களும் சரி எல்லா லாரி தொழிலாளியும் உங்களை நம்பித்தான் இருக்கிறோம். நீங்களும் நம்மளை depend பண்ணித்தான் இருக்கிறீங்க நாங்க உங்களை அதிகமா depend பண்ணி இருக்கிறோம். எங்களுக்கு சப்போர்ட் பண்ணி கொடுங்கள். அப்புறம் எல்லா பக்கமும் செடியெல்லாம் வைத்திருக்கிறார்கள் இது வந்து பெயரளவிற்கு இல்லாமல் அந்த செடியை மரமாக்கி கொடுங்கள். இதற்கு முன்னாடி லைசென்ஸ் வாங்கினவங்களும் அப்படித்தான் அதை அப்படியே கண்டுகொள்ளாமல் விட்டுவிடாதீர்கள். அப்புறம் நிறைய குட்டைகள், நீர் நிலைகளெல்லாம் இருக்கிறது. அதை சுற்றிலும் கொஞ்சம் செடிகளெல்லாம் வைத்து கொடுத்தீர்களானால் புகை பறக்காமல் இருக்கும். இது மட்டும்தான் கோரிக்கை. லாரிக்கார்ங்க உள்ளூர் மக்களுக்கு, உங்களை நம்பி இருக்கிறவங்களுக்கு சப்போர்ட் பண்ணி கொடுங்கள். நன்றி

16. <u>திரு.முரளீதரன்</u>

என்னோட பெயர் முரளீதரன். சூலூரிலிருந்து வருகிறேன். நான் கட்டுமான துறையிலிருக்கிறேன். இப்போ இந்த மாதிரி குவாரி, கிரஷரெல்லாம் நிறுத்தி வைக்கிறதனாலே நிறைய கட்டுமான தொழிலெல்லாம் பாதிக்கபடுது. பல நாட்களா தொழிலெல்லாம் நிறுத்தி இருக்கிறதனாலே விலையெல்லாம் ஏறிப்போகுது. அதனாலே

திரு. R.S.செந்தில் குமாருக்கும், சண்முகம் அண்ணாவுக்கும் லைசென்ஸ் தர முயற்சி பண்ணுங்க.

**மனுக்களின் எண்ணிக்கை : 2**

மேற்கூறியய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொளி குறுந்தகடு, ஒலி மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல் ஆகியவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆணையத்திற்கு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

கூட்ட முடிவில் மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர் அவர்கள் பேசும் போது இந்த கருத்து கேட்பு கூட்டத்தை தலைமை ஏற்று நடத்தி தந்த மாவட்ட வருவாய் அலுவர் அவர்களுக்கும் , தங்களுடைய கருத்துக்களை பதிவு செய்த பொதுமக்கள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள், சுற்றுசூழல் ஆர்வலர்கள் ஆகியோருக்கும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் மாவட்ட நிர்வாகம் சார்பில் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி வணக்கம் எனஅனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
கோயம்புத்தூர் தெற்கு

தனி மாவட்ட வருவாய் அலுவலர்,
(நிலம் எடுப்பு) மாநில நெடுஞ்சாலை
கோயம்புத்தூர் மாவட்டம்.